5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.